කම්කරු හා විදේශ රැකියා අමාත්‍යාංශය
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு
Ministry of Labour and Foreign Employment
හයවන මහල, "මෙහෙවර පියෙස", නාරාහේන්පිට, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
6 ஆவது தளம், "மெஹெவர பியெச", நாரஹேன்பிட்டி, கொழும்பு 05, இலங்கை.
6th Floor, " Mehewara Piyesa", Narahenpita, Colombo 05, Sri Lanka.

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My No. — MFE/DEV/HOB/03/vol ii | ඔබේ අංකය / உமது இல / Your No. | දිනය / திகதி / Date — 2022.09. |

**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் : 02/2022 (i)**

**வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர்களுக்கு முழு அளவிலான மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதி உரிமங்களை வழங்குவதற்கான திட்டம்**

வெளிநாட்டில் தொழில் புரிகின்ற இலங்கையர்களால் முழு அளவிலான மின்சார மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிகள் / அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பில் வெளியிடப்பட்ட 2022.08.31 ஆம் திகதியிடப்பட்ட 02/2022 ஆம் இலக்க தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் சுற்றறிக்கையின் பின்வரும் பிரிவுகள் இத்தால் திருத்தப்படுகின்றன.

**பிரிவு 4- நிபந்தனைகள்**

(1) 4.3 ஆம் உட்பிரிவின் முடிவில் பின்வரும் சொற்றொடர் சேர்க்கப்படுகின்றது.

"எவ்வாறாயினும், வாகனம், இரண்டு (2) வருட காலப்பகுதி நிறைவடைவதற்கு முன்னர் மூன்றாம் தரப்பினருக்கு மாற்றப்படுகின்ற சந்தர்ப்பத்தில், CIF பெறுமதியின் 10 சதவீதத்திற்கு சமமான பரிமாற்ற வரி விதிக்கப்படும் என்பதுடன், அத்தகைய தொகை அமெரிக்க டொலரில் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(2) இறக்குமதி செய்யப்படவுள்ள வாகனத்தின் CIF பெறுமதியின் ஆகக் கூடிய எல்லை **4.4** ஆம் உட்பிரிவிலிருந்து நீக்கப்படுவதுடன், அட்டவணையிலுள்ள உரித்து மற்றும் அதிலுள்ள CIF பெறுமதியுடன் தொடர்புடைய பணம் அனுப்பும் காலப்பகுதியை விபரிக்கின்ற பகுதி பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

| **பணம் அனுப்பும் பெறுமதி அமெரிக்க டொலர்** | **வாகனத்தின் வகை** | **வாகனத்தின் உரித்து மற்றும் CIF பெறுமதியுடன் தொடர்புடைய பணம் அனுப்பும் காலம்** |
|---|---|---|
| 3,000 அல்லது அதற்குமேல் | மின்சாரத்தில் இயங்கும் இரண்டு சக்கர வாகனங்கள்<br><br>(மோட்டார் சைக்கிள்- HS குறியீடு – 8711) | மே 01 முதல் 2023 ஏப்ரல் 30 வரை அல்லது அந்தத் திகதிக்கு முன்னர் வாகன அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் திகதி வரைக்கும் அனுப்பப்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் தொகையில் 50% இற்கும் குறைவான அல்லது சமமான CIF பெறுமதியுடைய வாகனமொன்று. |

| | | |
|---|---|---|
| 20,000 அல்லது அதற்குமேல் | நான்கு சக்கரங்களுடன் மின்சாரத்தில் இயங்கும் வாகனங்கள்<br><br>[மோட்டார் கார்- HS குறியீடு-8703 வர்த்தக வாகனம் – HS<br><br>குறியீடு 8704 (டபிள் கப்,வான், டிப்பர்) | 2022 மே 01 முதல் 2022 டிசம்பர் 31 வரை அல்லது அந்த திகதிக்கு முன்னர் வாகன அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் திகதி வரைக்கும் அனுப்பப்பட்ட வெளிநாட்டு செலாவணித் தொகையில் 50% இற்கும் குறைவான அல்லது சமமான CIF பெறுமதியுடைய வாகனமொன்று. |

பிரிவு **5 -** பூர்த்தி செய்யப்பட வேண்டிய அளவுகோல்கள்

(3) உட்பிரிவு **5.1** நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக, பின்வரும் பிரிவு பதிலீடு செய்யப்படுகின்றது.

1.1 "மின்சார வாகனத்தின் மின்கலத் தொகுதி (பட்டரி பக்) மற்றும் மின்சார மோட்டார் குறைந்தது 3 ஆண்டுகளுக்கு உற்பத்தியாளரின் / இறக்குமதியாளரின் / ஏற்றுமதியாளரின் உத்தரவாதத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், சர்வதேச மின்சார வாகனங்களுக்கான (EV) சாலை பாதுகாப்பு தரங்களுடன் வீதிப் பாதுகாப்பு நியமங்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்துதலும் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட / நியம நடைமுறைகள்/ முறைமைகளுக்கு அமைவாக, பயன்படுத் தப்பட்ட மின்கலத்தை முறையாக அகற்றுவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் இறக்குமதி யாளர்களால் / ஏற்றுமதியாளர்களால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்".

(4) உட்பிரிவு **5.3** நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு பதிலீடு செய்யப்படுகின்றது.

"வாகனம் புதியதாகவோ அல்லது பூஜ்ஜிய 'ஓடோமீட்டருடன்' கூடியதாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன், மின்சார வாகனமும், அதன் மின்கலமும் உற்பத்தி செய்யப்பட்ட வருடத்திலிருந்து ஒரு (1) வருடத்திற்குள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டிருத்தலும் வேண்டும்".

2. பிரிவு **6 - செயல்பாட்டு நடவடிக்கைமுறை**

(5) 6.3 ஆம் உட்பிரிவின் முடிவில் பின்வரும் சொற்றொடர் சேர்க்கப்படுகின்றது.

"வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்குவதைத் தீர்மானிக்கும் அதிகாரம் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிற்கு உரித்தளிக்கப்படுகின்றது".

(6) பிரிவு **8** நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக, பின்வரும் பிரிவு பதிலீடு செய்யப்படுகின்றது.

இதிலுள்ள விடயங்கள் தொடர்பில் தங்களுக்கு ஏதேனும் தெளிவுபடுத்தல் தேவைப்படுமாயின், தயவுசெய்து இந்த அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரை (நிருவாகம்) +94112582447 என்ற தொலைபேசி இலக்கத்தில் அல்லது திரு.பிரபோத கக்கொடாராச்சி அவர்களுடன் +94112368175/+94773039034 ஆகிய தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளுங்கள்.

ஒப்பம்/ஆர்.பி.ஏ.விமலவீர
செயலாளர்
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு